# போலீஸ் பார்வை

POLICE PARVAI


மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-7 • Issue-7 • மே-2025 • May -2025 • விலை ரூ.15/- • Rs.15/-


POLICE PARVAI NEWS WEB TV    E_Book: www.policeparvai.com



சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக தல்வீர் பண்டாரி தேர்வு

## மோடிக்கு எதிரான செய்திகளையே தேடி அலையும் ஊடகங்கள்



காவல்துறையில் நேர்மையாக பணியாற்றி பாராட்டு பெற்றுவரும் ADSP G.ஹரிகுமார்

## இஸ்லாமிய வீராங்கனைக்கு பாரதம் தந்த பெருமை

OPERATION SINDOOR

சிங்க பெண்கள்





+2 முடித்த பிறகு உயர் கல்வியில்

# 7.5% ஒதுக்கீடு யாருக்கு?


புற்றுநோயை தோற்கடித்தது அன்னாசி வெந்நீர்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

4 ராசியினருக்கு வாழ்க்கை தலைகீழாக மாற போகுது


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

**மே 2025 மலர் 10 இதழ் 7**



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செய்த்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S. ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,**
**No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.**
**Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,**
**Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only






# ஒன்றுபடுவோம் தீவிரவாதத்தை வேரறுப்போம்

மனிதனாகப் பிறந்து மனத்தால் வேறுபட்டு இனத்தால், மொழியால், மதத்தால், பிளவு பட்டு மனித குலத்தின் அடிப்படை குணமான மனிதநேயமில்லாமல் இறைவன் படைத்த இன்னுயிரை மனத்தால் மதத்தால் வேறுபட்ட மனித மிருகங்கள் தான் மனித உயிரை எடுக்கும் உண்மையான தீவிரவாதிகள்.

சுயநலத்துடன் இரக்கமற்ற மனித நேயம் இல்லாமல் செயல்படும் தீவிரவாதிகள் வேரறுக்கப்பட வேண்டும். காஷ்மீர் பஹல்காமில் நடைபெற்ற இரக்கமற்ற பயங்கரவாத தீவிரவாதிகளால் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் துப்பாக்கி முனையில் மதத்தின் பெயரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் அனைவரையும் பதற வைத்தது.

இதுபோன்ற மனித உயிரை கொல்லும் பயங்கர தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு துணை போனவர்கள் அனைவரும் கனவிலும் நினைத்து பார்க்க முடியாத வண்ணம் மிக கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இனிமேல் இதுபோன்று பயங்கரவாத செயல்களில் ஈடுபட மாட்டார்கள். நாம் கொடுக்கும் கடுமையான பதிலடி பயங்கர தீவிரவாதிகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். தீவிரவாதிகள் வேரறுக்கப்பட மனிதநேயம் உள்ள அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும்.

ஜெய் ஹிந்த்!

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.



# மாடனின் மந்திர ரகசியங்கள்




கருடசித்தர்
Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

நம் பாரத நாடு ஒரு தெய்வீக தேசமாகும். இங்கு ஆய கலைகள் 64-ம் தோன்றிய தேசமாகும்.

யோகம், ஞானம், பக்தி போன்ற அனைத்து தெய்வீக வழிபாட்டு முறைகளையும் சித்தர்களும், ரிஷிகளும், ஞானிகளும் மக்களுக்கு போதித்தார்கள்.

இந்த ஆய கலைகள் 64-ல் மந்திர தந்திர சாஸ்திரங்களும் அடங்கும்.

இந்த ஆய கலைகள் 64-ல் பெரும் தெய்வ வழிபாட்டு முறைகளும் சிறு தெய்வவழிபாட்டு முறைகளும் அடங்கும். அந்த தெய்வ வழிபாட்டு முறைகளின் மாடன் வழிபாடும் ஆதியில் இருந்த முக்கியமான ஒன்று. அதில் சுடலை மாடனை பற்றி பார்ப்போம்...

**சுடலை மாடன்**

மாடன் என்றால் மாடு என்று பொருள்படும். இது சிவன் கைலாயத்தில் உள்ள நந்தியைக் குறிக்கும். மாடு சாந்தமாக இருக்கும்போது நந்தியாக காட்சி தருகின்றார். காளை மாடு கோபமாக இருக்கும் போது மாடனாக மாறி விடுகின்றது. நந்தியே மாடனாக காட்சி தருகிறார்.

சிவனே அகோர ருத்திரனமாக மாறுவதுபோல், கைலாய நந்தியே மாடனாக மாறுகிறது.

**சிவனின் மயான ருத்திர வடிவம்**

சிவன் சாந்தமாக இருக்கும்போது அன்பே சிவமாக காட்சி அளிக்கிறார். அதுவே தீய சக்திகளை அழிக்க கோபமாக மாறும்போது அகோர மாயன ருத்திரனாக மாறிவிடுகிறார்.

சிவபெருமான் கோபத்தில் தீய சக்திகளையும் துஷ்ட சாத்தான் பேய்களையும் அழிக்க சுடலையில் இருக்கும்போது நந்தியும் கோபமாக மாறி மாடனாக மாறி சிவபெருமானுடன் சுடுகாடு என்ற சுடலை செல்லும் சிவபெருமானுடன் சேர்ந்து மாடனாக மாறி எதிரிகளை அழிப்பார். அதனால் தான் சுடலை மாடன் என்ற பெயர் வந்தது. மாடனில் பலர் உண்டு. நந்தியின் அகோர

வடிவம் ஆகும். நந்தி சாந்தமாக இருக்கும்போது ஞான வடிவமாகும்.

**மாடனின் வகைகள்**

1. சுடலை மாடன், 2.தளவாய் மாடன், 3. சப்பாணி மாடன், 4.ஆலடி மாடன், 5.ஆகாச மாடன், 6.ஆகவச மாடன், 7. ஆண்டி மாடன், 8.அரசடி மாடன், 9. அரையடி மடன், 10.அரச குல மாடன், 11.அரிமுத்து மாடன், 12. வண்ணார மாடன், 13. அன்ன மாடன், 14.அடுபபடி மாடன், 15.அழனி மாடன், 16. அகழி மாடன், 17. அத்தி மாடன், 18.அரிவாள் மாடன், 19. தெப்பக்குளத்து மாடன், 20. செக்கடி மாடன், 21. கரையடி மாடன், 22. மடையடி மாடன், 23. பனையடி மாடன், 24. வேம்படி மாடன், 25.கிணற்றடி மாடன், 26.குளக்கரை மாடன், 27.தேரடி மாடன், 28.படித்துறை மாடன், 29. பரண் மாடன், 30. பன்றி மாடன், 31. சிவ மாடன், 32. சக்தி மாடன், 33.கரடி மாடன், 34.கச மாடன், 35.ஓங்கார மாடன், 36.ஒய்யார மாடன், 37.ஒளிமுத்து மாடன், 38.ஏறு மாடன், 39.எச மாடன், 40.ஊசிக்காட்டு மாடன், 41. உதிர மாடன், 42.உறி மாடன், 43.உடுக்கை மாடன், 44. ஈன முத்து மாடன், 45. பேச்சி மாடன், 46. பூக்குழி மாடன், 47.பிச்சிப் பூ மாடன், 48.குதிரை மாடன், 49.தூசி முத்து மாடன், 50. கொடிமரத்து மாடன், 51.முப்புலி மாடன், 52. அணைக்கரை மாடன், 53.வெள்ளாவி மாடன், 54.சந்தையடி மாடன், 55.முச்சந்தி மாடன், 56.வண்டி மாடன், 57.நடுகாட்டு மாடன், 58.நல்ல மாடன், 59.சுடுக்காட்டு மாடன், 60. வாழை மரத்தடி மாடன், 61.வயல்கரை மாடன், 62. மகாராஜ மாடன் என்று பலவகையான மாடன் பெயர்கள் அழைக்கப்படுகின்றன.

**மாடன் வழிபாட்டு முறைகள்**

மாடன் கிராம தெய்வ வழிபாடாக மக்களால் வழிபடப்படுகிறது. மாடனை ஊர் எல்லையில் கோவில் கட்டி வணங்குவார்கள். ஊரின் காவல் தெய்வமாக போற்றப்படுகின்றார். ஊருக்குள் நுழையும் போது கொடிய நோய்களையும் துஷ்ட பேய்களையும் ஊருக்குள் நுழையாதபடி தடுத்து விரட்டக் கூடியவர்.

மாடன் வழிபாடு ஆதியில் இருந்தே இருந்துள்ளது. தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் மாடன் கோவில்களும் மாடன் வழிபாடுகளும் அதிகம் உள்ளது. மிகவும் நீதியான தெய்வம். துடியான தெய்வம். தவறுக்கு உடனே தண்டனை கொடுக்கும் தெய்வம்.

ஏமாற்றப்பட்டவர்கள் பிறரால் பாதிக்கப்பட்டவர்கள் மாடன் மந்திரம் சொல்லி முறையிட்டால் உடனே அவர்களுக்கான நீதியை வழங்கி குற்றவாளிகளுக்கு தண்டனை அளிக்கும் நீதிபதி மகாராஜா மாடன்.

**மாடன் பூஜை செய்யும் பொருட்கள்**

தேங்காய், வாழைப்பழம், பூசணிக்காய், 10 வகையான பழங்கள், விபூதி, குங்குமம், மஞ்சள் பொடி, கற்பூரம், மஞ்சள் துணி, 8 வகையான காய்கறிகள், அவல்-பொறி, கற்கண்டு, 6 வகையான பூக்கள் அனைத்தையும் கொண்டு பூசை செய்யலாம்.

ஆதி காலத்தில் சித்தர்கள் சைவ வழியில் படையல் வைத்து பூசை செய்வார்கள். சர்க்கரை பொங்கல் வைத்து நெல் பொரியோடு அவல் வைத்து வாழை இலைகளில் இவற்றை பரப்பி வழிபடுவார்கள்.

**மாடன் வழிபடுவதால் ஏற்படும் பயன்கள்**

மாடனை நல்ல காரியத்துக்காக வழிபட வேண்டும். தீய காரியத்துக்காக மாடனை பயன்படுத்தக் கூடாது. நாள்பட்ட குடும்ப தடைகளையும் குடும்ப பிரச்சினைகளை யும் கோர்ட் வழக்குகளும் பில்லி, சூனியம், ஏவல் சக்திக ளும், கொடிய பேய்களும் கொடிய நோய்களும் மாடனை நீதியாக உண்மையாகவும் வழிபட்டால் இவை அனைத்தும் நம்மை விட்டு விடும்.

நம் குடும்பத்தை விட்டு விலகி ஓடும் மாடனை முறையாக மந்திரம் சொல்லி வழிபடவேண்டும். மாடன்க ளில் முக்கியமாக மாடனாக மக்கள் வழிபடுவது சுடலை மாடன், சப்பாணி மாடன், நீதிபதி மகாராஜா மாடன் போன்றவர்கள். இந்த மாடன் வழிபாடு அதிக அளவில் தென் மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது.

**சுடலை மாடன் மந்திரம்**


*ஓம் மாட உத்தண்ட மாட ஓங்கார மாட*
*அரி மாட அரமாட சுடலை மாடா*
*சுடலையாண்டி வாகன மாட சுப்ப மாட*
*சுருட்டு சுருளை மாட மயான நந்திமாட*
*அகோர மாட துஷ்ட ஆவிகளை விரட்டும்*
*சுடலை மாட இரு மாட மாசான முத்துமாடா*
*மாயாண்டீஸ்வரர் மாயான மாட*
*வா மாடா வா மாடா வசி மாடா வசி மாடா*
*நீள் கொம்பா, வட்டக் கொம்பா, ஊசிக் கொம்பா*
*மயான ரவி மாடா சிங் சிங், மயான ருத்திர மாடா சிங் சிம் சிவ சிகுர*
*மாயான சுடை மாடா வசி வசி வசி வசி தும்பட் சுவாகா*

**சப்பாணி மாடன் மந்திரம்**

*ஓம் சப்பாணி மாடா அட மாடா*
*வட மாடா உச்சாட மாடா கோரக்க மாடா*
*வீர சார சனி சப்பாணி மாடா பிரம்ம*
*ராட்சசரையும் பேய்களையும் பிரம்படி கொடுத்து*
*அடித்து விரட்டும் வீர மாடா ஹரீம் சிங் சிங்*
*நந்திய மாடா சண்ட சங் சப்பாணி மாடா,*
*மூங்கில் புதறு, முள் புதறு, முள் புதறு, சூரைப்புதறு சூட்சுமப் புதரில்*
*ஊர்ந்து வரும் சப்பாணி மாடா சடுங் சடுங்*
*சவுடா சவுடா ரீங் ரீங் சிங்*
*கைலாச விளக்கு மாடா சப்பாணி மாட*
*உத்தண்ட ஒதண்ட மாடா வசி வசி வசி வசி தும்பட சுவாகா*

இந்த மந்திரங்களை நல்ல செயலுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். தீய காரியங்களுக்கு மாடன் மந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது. முழு பக்தியுடனும் அவருக்கு பூசை பொருட்கள் வைத்து பூசை செய்ய வேண்டும். நமக்கு சகல உதவியும் சப்பாணி மாடன் செய்வார்.

**சுடலை மாடன் யந்திரம்**




இதை சுத்தமான செப்புத் தகட்டில் எழுதி சுடலை மாடன் மந்திரம் சொல்லி உருக் கொடுக்க வேண்டும். 120 நாள் பூசைப் பொருள் வைத்து மாடன் மந்திரம் சொல்லி வர மாடன் சித்தியாகும். மாடன் பூசை சைவ பூசையே பயன்படுத்த வேண்டும்.

ஆதியில் சித்தர்கள் சைவ பூசை செய்தே வழிபட்டுள்ளார்கள். மாடன் நந்தியின் அம்சமாகும். நந்தி ஞானத்தின் வழியாகும் அதர்மத்தை அழித்து தர்மத்தை காப்பவர் மாடன்.

**மாடன் மை**

சித்தர்கள் சொன்ன முறையில் மாடன் மையை தயார் செய்ய வேண்டும். பல மூலிகைகளையும் உபரசங்களையும் வைத்து சைவ முறையில் சித்தர்கள் மாடன் மை செய்வார்கள். அதை சைவ நெறியோடு செய்து மாடன் யந்திரத்தில் வைத்து சைவ பூசை செய்ய வேண்டும்.

மாடன் மையை மாடனுக்கு உயிர் கொடுக்கும். மாடனை உயிர் கொடுத்து மை மூலமாக சித்தி செய்து கொண்டால் அஷ்ட வேலைகளையும் மாடன் செய்வார்.

மாடன் மையை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும். நல்ல காரியங்களுக்கு மாடன் பூசை செய்து மாடனை வழிபட வேண்டும். அதிகம் விபூதியோடு பூசை செய்ய வேண்டும்.

தென் மாவட்டங்களில் அதிக மக்களுக்கு குல தெய்வமாக விளங்குகின்றார். கன்னியாகுமரி, திருநெல்வேலி பகுதிகளில் மாடன் கோவில் அதிகம் உள்ளது. மற்ற ஊர்களில் ஊர் எல்லைகளில் ஊர் காக்கும் காவல் தெய்வமாக விளங்குகின்றார்.

**மாடன் உச்சாடனம்**

மாடன் மையை நம் நெற்றியில் வைத்து கொண்டு மாடன் மந்திரத்தை சொல்ல, மாடன் உச்சாடனம் ஆவார். நம் உடம்பில் இறங்கி நமக்கு எதிரே இருப்பவர்களின் முக்காலத்தையும் சொல்லுவார். அவர்கள் எந்த காரியங்களுக்கு வந்திருக்கின்றார்களோ அந்த காரியத்தை நிறைவேற்றி வைப்பார்.

மச்சக் குறி சொல்லுதல், அருள் வாக்கு சொல்லுதலும், முக்காலத்தையும் சொல்லும் வாக்கும் மாடனே நமக்கு அருள்புரிவார். கிராம தெய்வங்கள் வழிபாடு நம் பாரம்பரிய வழிபாடாகும்.



கிராம தெய்வங்கள் ஆதி காலத்தில் மூங்கில் புதர்களிலும், சங்கம் புதரிலும், கற்றாழை புதரிலும், சூரைப் புதரிலும், சனிப் புதரிலும் அடங்கி இருக்கும்.

ஆதி காலத்தில் இருந்தே நம் தேசத்தில் கிராம தெய்வ வழிபாடுகள் பாரம்பரியமாக இருந்துள்ளது. நம் முன்னோர்களை நினைத்து நம் கிராம தெய்வ வழிபாடுகளை நாம் செய்யும்போது சகல பிரச்சினகளும் விலகி நமக்கு நன்மைகள் நடக்கும்.

நம் முன்னோர்கள் சொன்ன வழியில் நாம் மாடன் வழிபாடுகளையும் நம் குல தெய்வ வழிபாடுகளையும் மறக்காமல் தொடர்ந்து செய்ய வேண்டும். குலம் தழைக்க குல தெய்வ வழிபாடு செய்ய வேண்டும். குல தெய்வ வழிபாட்டில் குறை இருக்கும்போதுதான் குடும்பத்தில் பிச்சினை வர ஆரம்பிக்கும். அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடியது குல தெய்வ வழிபாடே ஆகும். அதை மறக்காமல் நாமும் பின்பற்றி நமக்கு வரும் சந்ததியினருக்கும் கற்று கொடுக்க வேண்டும்.

**திருமூலர் திருமந்திரம்**

*காளியோடு ஆடி கனகா சலத்தாடிக்*
*கூறியோடு ஆடி குவலயத்தே ஆடி*
*நீளிய நீர் நீகால் நீள்வான் இடையாடி*
*நாளுர அம்பலத்தே ஆடும் நாதனே*

**திருமூலர் திருமந்திரம்: நந்தி பாடல்**

*நந்தி அருளாலே நாதனாம் போர்பெற்றோம்*
*நந்தி அருளாலே மூலனை நாடினோம்*
*நந்தி அருளாவதென் செயும் நாட்டினில்*
*நந்தி வழிகாட்ட நானிருந்தேனே*
*நந்தி அருள் பெற்ற நாதனை நாடிடின்*
*நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி*
*மனன்று தொவுட பதஞ்லி வியாக்ரமர்*
*என்று இவர் ென்னோடு என்மரும்மாமே*

# காவல்துறையில் நேர்மையாக பணியாற்றி பாராட்டு பெற்றுவரும் ADSP G.ஹரிகுமார்

தமிழ்நாடு காவல்துறையில் நேர்மையாகவும் கடமை உணர்வுடன் மிக சிறப்பாக காவல் பணியாற்றி மேல் அதிகாரிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பல பாராட்டுகளை பெற்று வருகிறார்.

திருவள்ளூர் மாவட்ட ADSP G.ஹரிகுமார் அவர்கள் தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிக்கு சேர்ந்து தனது திறன் பட செயலாற்றலால் காவல் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று மேலும் காவல் உதவி ஆணையராகவும் காவல் துணை கண்காணிப்பாளராகவும் பல்வேறு இடங்களில் சென்னையில் பணியாற்றி பதவி உயர்வு பெற்று, தற்பொழுது திருவள்ளூர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று தனக்கு பிடித்தமான இந்த காவல் பணியை அப்பழுக்கற்ற நேர்மையான கடமை உணர்வுடன் நேசித்து, இதுவரை எந்தவித ரிமார்க் இல்லாமல் காவல் பணியாற்றுகிறேன் என்று கூறிய ADSP G.ஹரிகுமார் அவர்கள்.

“நான் காவல்துறையில் சேர்ந்து சிறப்பாக பணியாற்ற தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற எனது தந்தை திரு.கோவிந்தராஜ் அவர்களும் எனது தாயார் சரோஜினி அவர்களும் தான் எனது முன்னேற்றத்திற்கான வழிகாட்டிகள் என்று கூறுவதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன் பெற்றோர்களின் ஆசிகளுடனும் நான் நேசித்து பணியாற்றி வருகின்ற இந்த காவல்துறையில் எனக்கு வழிகாட்டியாக உறுதுணையாக எனது காவல் பணி வளர்ச்சிக்கு மிகவும் உதவிகரமாக செயல்பட்ட எனது காவல்துறை மேல் அதிகாரிகளுக்கும், எனக்கு நேர்மையான சிறந்த காவல் பணிக்கான





நற்சான்றிதழை வழங்கி பாராட்டிய திருவள்ளூர் மாவட்ட SP திரு.ஸ்ரீ நிவாசபெருமாள் அய்யா அவர்களுக்கும் நான் மனமார்ந்த நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது காவல்துறை பணி பயணத்தில் சுமார் 30 ஆண்டு காலமாக எந்த ஒரு ரிமார்க் இல்லாமல் நேர் மையாக கடமை உணர்வுடன் நான் காவல் பணியாற்றி வருவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதனால் தான் எனது காவல்துறை மேல் அதிகாரிகளும் பொது மக்களும் என்னை வாழ்த்தி பாராட்டி ஊக்கமளித்து வருகின்றனர். மேலும் எனது காவல் பணியை மிக சிறப்பாக தொடர்ந்து செய்வேன் என்பதில் உறுதியாக இருக்கிறேன்” என திருவள்ளூர் மாவட்ட ADSP. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. G.ஹரிகுமார் அவர்கள் மகிழ்வோடு கூறினார்

நிருபர்: A.R.முருகேசன், திருவள்ளூர்.

**அன்பு இதயத்தில் இருக்கட்டும்..**
**அறிவு செயலில் இருக்கட்டும்..**
**ஆணவம் காலடியில் இருக்கட்டும்..**
**நம்பிக்கை உன் மொத்த உருவமாக இருக்கட்டும்..**
**முடிவில் உன் பங்கு முழுமையானதாக இருக்கட்டும்..**
**வெற்றி உனதே..!**



**– ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**



சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக தல்வீர் பண்டாரி தேர்வு

# மோடிக்கு எதிரான செய்திகளையே தேடி அலையும் ஊடகங்கள்

சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தேர்தல். இந்தியாவுக்கு மிகப்பெரிய வெற்றி. பிரதமர் மோடியின் சாணக்கிய ராஜதந்திரம். உலக அரங்கில் பிரிட்டனின் தோல்வி. பிரதமர் மோடி உலகம் முழுவதும் உறவுகளை எவ்வாறு உருவாக்கினார் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நீதிபதி தல்வீர் பண்டாரி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் நீதிபதி தல்வீர் பண்டாரி 193 வாக்குகளில் 183 வாக்குகளைப் பெற்றார் (ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒருவர்) பிரிட்டனின் நீதிபதி கிறிஸ்டோபர் கிரீன்வுட்டை தோற்கடித்தார். பட்டத்தில் பிரிட்டனின் 71 ஆண்டுகால ஏகபோகத்தை முறியடித்தார்.

பிரதமர் மோடியும், வெளியுறவுத் துறை அமைச்சகமும் கடந்த 6 மாதங்களாக இதை சாதிக்க கடுமையாக உழைத்து வருகின்றனர்! 193 நாடுகளின் பிரதிநிதிகளை தொடர்பு கொண்டு, எளிதில் வெற்றி பெறுவது உறுதியான பிரிட்டிஷ் வேட்பாளர் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்குவது மிகவும் கடினமான பணியாக இருந்தது. பதினொன்றாவது சுற்று வாக்கெடுப்பில், நீதிபதி தல்வீர் பண்டாரி பொதுச் சபையில் 193 வாக்குகளில் 183 மற்றும் ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 15 இல் 15 வாக்குகளைப் பெற்றார். நீதிபதி தல்வீர் பண்டாரி 9 ஆண்டுகள் இந்தப் பதவியில் நீடிப்பார். இந்த 183 நாடுகளும் இந்தியாவுக்கு வாக்களித்தன,

அவர்களில் யாரும் “மோடி பக்தர்கள்” அல்ல! அவர்கள் அனைவரும் சிந்தனைமிக்கவர்கள், நமது சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகு உலகெங்கிலும் உள்ள நாடுகளுடன் நமது பிரதமர் மோடிஜி எவ்வளவு மரியாதை, மரியாதை மற்றும் நல்லுறவைக் கட்டியெழுப்பியுள்ளார் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்திய செய்தி ஊடகங்கள் இதுபோன்ற பெரிய விஷயங்களை ஒளிபரப்புவதில்லை, மோடிக்கு எதிரான செய்திகளையே விரும்புகிறார்கள், அதைத்தான் தேடி அலைகின்றனர் என்பது வருந்ததக்கது.

# மக்கள் மாற்றத்தை விரும்பியிருக்கிறார்கள், நாம் அமைதி காப்போம்




காமராஜர் ஒரு நாள் தன் தோளில் வலது பக்கத்தில் துண்டு போடுவதற்கு பதில், இடது பக்கத்தில் போட்டுள்ளார். உடனே பத்திரிகையாளர்கள், துண்டை மாற்றி போட்டுள்ளீர்கள் எதுவும் விஷேசமா? என்று கேட்டுள்ளனர்.

காமராஜரோ ஒன்றும் இல்லை, சும்மா தான் போட்டுள்ளேன் என்று சொல்லி இருக்கிறார்.

பத்திரிகையாளர்களோ அவரை விடவில்லை. துண்டு மாற்றி போட்டதற்கு காரணம் என்ன? என்று துளைக்க ஆரம்பித்துள்ளனர்.

உடனே காமராஜர் ஒண்ணும் இல்லையா, "இடது பக்கம் சட்டை கிழிந்துள்ளது அதை மறைக்கத்தான் இடது பக்கம் துண்டை போட்டுள்ளேன்" என்றாராம்.



'வேணும்ன்னா பாருங்கள்' என்று துண்டை எடுத்து கிழிந்த சட்டையை காண்பித்தாராம்.

அதைக்கண்ட பத்திரிக்கையாளர்கள் அனைவரும் தலைகவிழ்ந்தனர்.

இப்படியும் ஒரு முதல்வர்! இவரையும் தேர்தலில் தோற்கடித்த நன்றி கெட்ட மனிதர்கள் தாம் நாம்.

தமிழ்நாட்டில் "மக்கள் மாற்றத்தை விரும்பியிருக்கிறார்கள். நாம் அமைதி காப்போம்" இதுதான் தேர்தலில் தோற்றபிறகு அவர் பத்திரிக்கையாளர்களிடம் கூறியது!

இந்த பெருந்தன்மை எத்தனை அரசியல்வாதிகளுக்கு வரும்?.

மேலும், காமராஜர் ஒரு முறை ஒரு கலெக்டரை அழைத்து இருந்தார். உரையாடலுக்கிடையே தேநீர் வந்தது. டீயக் குடிங்கன்னேன் என்றார் காமராஜர்.

தேநீரைப் பருக சில நிமிடங்கள் தயக்கம் காட்டினார் அந்த கலெக்டர்.

உடனே காமராஜர் அவரது டீக்கோப்பையை அருகில் சென்று பார்த்தார். அதில் ஈ ஒன்று விழுந்து துடித்துக் கொண்டு இருந்தது. ஈயை கையில் எடுத்து வெளியே பறக்க விட்டார் காமராஜர்.

பிறகு கலெக்டரிடம் ஓ! டீயைக் குடிப்பதா, வேண்டாமான்னு யோசித்த நீங்க. அந்த ஈயைப் பத்தி நினைக்கலையே. உங்களுக்கு டீ தான் பிரச்சனை. ஆனா அந்த ஈக்கு? வாழ்வா, சாவா-ங்கறது பிரச்சனை. இப்படி உங்களைபற்றி மட்டுமே நீங்க சிந்திச்சு செயல்பட்டா, மக்களோட பிரச்சினைகளை பற்றி எப்படி சிந்திப்பீங்க என்று கேட்டாராம், அய்யா காமராஜர்.

கலெக்டர் தலை குனிந்தார்.



காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (102)

நமக்கு நெருக்கடியான நேரத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியது என்றாலும், உதவிய நேரத்தை எண்ண அது இந்தப் பூமியை விட மிகப் பெரியதாகும்.



## கோவை மாவட்டம் காவல்துறை சார்பாக

# கிராம பகுதிகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்திய மாவட்ட SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள்

பொள்ளாச்சியில் உள்ள பண்ணை வீடுகள் மற்றும் கிராமப்புற வீடுகளுக்கான பாதுகாப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்.

கோவை மாவட்டத்தில் நடைபெறும் குற்றச்செயல்களை தடுக்கும் நோக்குடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்களின் ஆலோசனையின் பேரில், புறநகர் மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள பண்ணை வீடுகள் மற்றும் தனியார் வீடுகளின் பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக, 03.05.2025 அன்று வடக்கிப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், பண்ணை வீடுகள் மற்றும் கிராமப்புற வீடுகளுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் பங்கேற்று, பொதுமக்களுக்கு பல்வேறு பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விளக்கினார்.

அதில் பண்ணை மற்றும் கிராமப்புற வீடுகளில், சிசிடிவி கேமரா பொருத்துதல், கதவுகளில் எச்சரிக்கை அலாரம் அமைத்தல், பாதுகாப்பிற்காக நாய் வளர்த்தல், சந்தேகத்திற்கிடமான நபர்கள் பார்வையில் பட்டால் உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என அறிவுறுத்தினார். மேலும், "KAVAL UDHAVI" எனும் காவல் உதவி செயலியின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

KAVAL UDHAVI செயலியின் மூலம் காவல்



நிலையங்களின் இருப்பிடம் அறிதல், அவசர எச்சரிக்கை தகவல்களை அனுப்புதல்,புகார்களை பதிவு செய்தல், FIR விவரங்கள் மற்றும் காணாமல் போன ஆவணங்களைப் பற்றிய தகவல்கள் பெறுதல் போன்ற பல்வேறு வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெறுவதை அவர் எடுத்துக்கூறினார்.

கூகுள் ப்ளே ஸ்டோரில் " KAVAL UDHAVI" என தேடி செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு கேட்டுக்கொண்டார்.

மாவட்டத்தின் அனைத்து காவல் உட்கோட்டங்களில் துணை காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் இதுபோன்ற விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


நிருபர்: P.நடராஜ், கோவை.

# தென்காசிகொலை வழக்கின் குற்றவாளிகள் 4 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைப்பு



தென்காசி மாவட்டம், தென்காசி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கீழப்புலியூரில் கடந்த மாதம் நடைபெற்ற கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளான காசிமேஜபுரம் வல்லப விநாயகர் கோவில் தெருவை சேர்ந்த ராமையா என்பவரின் மகன் செண்பகம்(43), கணேசன் என்பவரின் மகன் ராமசுப்பிரமணியன்@ ரமேஷ்(25), மணிகண்டன் என்பவரின் மகன் ஹரிஹரசுதன்(24) மற்றும் குற்றாலம் குடியிருப்பு தெற்கு தெருவை சேர்ந்த ராஜ் என்பவரின் மகன் மணிகண்டன் @ புறா மணி(32) ஆகியோர் மீது பிரிவு 14, குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் பரிந்துரையின் பேரில், ஆட்சியர் திரு.ஏ.கே.கமல் கிஷோர் IAS அவர்கள் உத்தரவில், மேற்படி நான்கு நபர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.



## வியான முத்திரை

சுட்டு விரலின் முனையையும், நடுவிரல் முனையையும் பெருவிரலின் முனையோடு சேர்க்கவும். மற்ற விரல்களை தளர்வாக வைத்துக் கொள்ளவும். உயர் இரத்த அழுத்தம், தாழ் இரத்த அழுத்தம் இரண்டையும் சரி செய்யும். அதிக வியர்வை, மலம் நீர்த்து போதல், தாகம், சிறுநீர் அதிகம் போதல் ஆகியவை அகலும். சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க. **(இரண்டு கைகளிலும் செய்க...)**

# போதை பாதையை விட்டு வெற்றிப்பாதையில் பயணிப்போம்

## இளைஞர்களுக்கு காவல்துறை அறிவுறுத்தல்

## 3.50 கிலோ கஞ்சா பறிமுதல், 5 பேர் மீது வழக்கு; 3 பேர் கைது



கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப் பாளர் Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக நேசமணி நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் 3 கிலோ 500 கிராம் எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா பறிமுதல் செய்தனர். இதைத்தொடர்ந்து, கோட்டார் பகுதியை சேர்ந்த மாணிக்கம் என்பவரின் மகன் முருகன்(47), கரிய மாணிக்கபுரம் பகுதியை சேர்ந்த சுப்பையா ஆசாரி என்பவரின் மகன் பேச்சியப்பன் (27), குழிக்கோடு பகுதியை சேர்த்த ராஜ் என்பவரின் மகன் அருண்(23) ஆகிய மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.கன்னியாகுமரி மாவட்ட இளைஞர்கள் போதை பாதையை தவிர்த்து வெற்றி பாதையில் பயணித்து வாழ்வில் வெற்றியடைய வேண்டும் என மாவட்ட காவல்துறை சார்பாக அறிவுறுத்துகிறோம்.

நிருபர்: J.ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி




செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438

**பண்ருட்டி அருகே சென்னை – கும்பகோணம் சாலையில்**

# மோட்டார் சைக்கிளில் வந்து ஆடுகளை திருடிய 2 சிறுவர்களிடம் விசாரணை





கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் பண்ருட்டி உட்கோட்ட குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் திரு. தங்கவேல் காவலர்கள் ஆனந்த், ராஜகவி, மகேஷ், பார்த்திபன் ஆகியோர் குற்ற தடுப்பு நடவடிக்கையாக சென்னை – கும்பகோணம் சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளை தடுத்து நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது, போலீசாரை கண்டவுடன் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் அதிவேகமாக ஓட்டி சென்றவர்களை மந்தாரக்குப்பம் அருகே மடக்கி பிடித்து நிறுத்தினர். அந்த மோட்டார் சைக்கிளில் (YAMAHA MT – TN31CK 0262) 2 ஆடுகளை திருடிக்கொண்டு வந்தது தெரியவந்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த 16 வயது சிறுவர்கள் 2 பேரிடம் விசாரணை மேற்கொண்டதில், அவர்கள் வடக்கு மேலூர் செல்வராஜ் என்பவரின் வீட்டில் கட்டியிருந்த ஆடுகளை திருடியதாக ஒப்புக்கொண்டனர்.

உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில், மோட்டார் சைக்கிள் மற்றும் 2 ஆடுகளையும் பறிமுதல் செய்த போலீஸார் நெய்வேலி நகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மேற்படி நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரவு ரோந்து பணியில் ஆடு திருடிய திருடர்களை பிடித்த உதவி ஆய்வாளர் திரு தங்கவேல் மற்றும் காவலர்களை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு S.ஜெயக்குமார் IPS அவர்கள் பாராட்டினார்.

நிருபர்: P.முத்துக்குமரன், கடலூர்




காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS முன்னிலையில்

# 807 கிலோ கஞ்சாவை எரித்து அழித்த மதுரை மாநகர காவல்துறையினர்

மதுரை மாநகர காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட 172 கஞ்சா வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 806.051 கிலோ கஞ்சாவை, போதைப்பொருட்கள் ஒழிப்பு குழு தலைவர் (DRUG DISPOSAL COMMITTEE) மாநகர் காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்கள் மற்றும் உறுப்பினர்களான மதுரை மாநகர் வடக்கு மாவட்ட துணை ஆணையர் திருமதி.அனிதா, தடய அறிவியில் ஆய்வக உதவி இயக்குநர், மதுரை மாநகர் கட்டுப்பாட்டு அறை உதவி ஆணையர், மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் ஆகியோர்களின் முன்னிலையில், சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர்களின் அறிக்கையுடன் அனைத்து சட்ட விதிமுறைகளையும் பின்பற்றி பெறப்பட்ட நீதிமன்ற ஆணையுடன் 03.05.2025- அன்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் உள்ள ASEPTIC SYSTEMS தொழிற்சாலையில் கஞ்சா அழிக்கப்பட்டது.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை.





## லயன்ஸ் கிளப் மற்றும் சட்ட பணி குழு சார்பில்

# கொடைக்கானல் மூங்கில் பள்ளம் கிராம பழங்குடியின மக்களுக்கு நலதிட்ட உதவிகள்

## நீதிபதி திரு.கிஷோர் நந்து அவர்கள் வழங்கினார்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் மன்னவனூர் ஊராட்சியை சேர்ந்த மூங்கில் பள்ளம் கிராம பழங்குடியின மக்களுக்கு கொடைக்கானல் லயன்ஸ் கிளப் மற்றும் சட்ட பணி குழு இணைந்து நலதிட்ட உதவி வழங்கும் விழா கீழானவயல் கிராமத்தில் நடைபெற்றது. கொடைக்கானல் நடுவர் நீதிமன்ற நீதிபதி திரு.கிஷோர் நந்து அவர்கள் தலைமை வகித்தார்.

இந்த நலதிட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கொடைக்கானல் லயன்ஸ் கிளப் தலைவர் MJF லயன் Dr.T.P.ரவீந்திரன் மற்றும் பொறுப்பாளர்கள் சட்டபணிக்குழு நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக கொடைக்கானல் மேல் மலை ஒன்றிய துணை செயலாளர் மற்றும் மன்னவனூர், கவுஞ்சி, பேலூர், கீழானவயல் ஆகிய கிராமங்களில் இருந்து பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். சிறப்பம்சமாக ஆதிவாசிகள் குடியிருப்பு பகுதிக்கு தேவையான சாலை வசதி, மின்சார வசதி ஏற்படுத்தி தரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் நீதியரசர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.



தொடர்ந்து, மேல்மலை கிராம மக்களின் சார்பாக, கிளானவயல், மஞ்சம்பட்டி, சின்னாறு வழியாக கோயமுத்தூர் செல்வதற்கான சிறப்பு சாலை வசதிகள் ஏற்படுத்தி தர கேட்டுக்கொண்டனர்.

அதற்கு பதிலளித்த நீதியரசர் திரு.கிஷோர் நந்து அவர்கள் விரைவில் இந்த சாலை அமைக்கும் பகுதிகளை ஆய்வு செய்து சாலை அமைக்கும் பணியை தொடங்குவதற்கு ஆவண செய்வதாக தெரிவித்தார். விழாவின் முடிவில், இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்



செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438



அரியலூர் நகரில் சில மணி நேரத்திற்குள்

# தவறவிட்ட நகையை உரிமையாளரிடம் ஒப்படைத்த காவல்துறையினர்

அரியலூர் நகர காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் திரு.சசிகுமார் மற்றும் ஊர்க்காவல் படை வீரர் திரு.ரமேஷ் குமார் ஆகிய இருவரும் மதியம் செந்துறை சாலையில் வழியாக ரோந்துப்பணி சென்றபோது, வெங்கடேஸ்வரா உணவகம் வெளியே
13 கிராம் தங்க நகை கீழே கிடந்து உள்ளது.

இதனையடுத்து தங்க நகையை கைப்பற்றி அருகில் உள்ள நபர்களிடம் விசாரணை செய்துவிட்டு. நகையை அரியலூர் காவல் நிலையத்தில் எடுத்து வந்து காவல் நிலைய அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

அதன் பிறகு சென்னை ஆவடியை சேர்ந்த சுந்தரி என்பவர் நகை காணாமல் போனதாக காவல் நிலையம் வந்து புகார் அளிக்க வந்த பொழுது, தாங்கள் குடும்பத்தினருடன் தஞ்சாவூர் சென்று சாமி கும்பிட்டு விட்டு, அரியலூர் வழியாக ஆத்தூர் செல்ல திட்டமிட்டு இருந்தோம். மதிய உணவுக்காக அரியலூர் வெங்க டேஸ்வரா உணவகத்திற்க்கு சென்றபோது தவறுதலாக பர்ஸில் இருந்த நகை கீழே விழுந்ததாக கூறினார்.

இதனை அடுத்து உரிய விசாரணைக்கு பிறகு உண்மை தன்மை அறிந்த பின்னர், தலைமை காவலர் திரு.சசிகுமார் அவர்கள் தங்க நகையை அதன் உரிமையாளர் திருமதி.சுந்தரி அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது அரியலூர் நகர காவல் உதவி ஆய்வாளர் திரு.சரவணக்குமார் அவர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.மகாலட்சுமி அவர்கள், மற்றும் முதல் நிலை காவலர் திரு.வெற்றிச்செல்வன் அவர்கள் உடனிருந்தனர்.

நிருபர்: R.தங்கபாண்டியன், அரியலூர்




# 4 ராசியினருக்கு வாழ்க்கை தலைகீழாக மாற போகுது

மே மாதம் 5 ராசிக்காரர்களுக்கு மிகவும் சிறப்பானதாக இருக்கும். இந்த மாதத்தில் சூரியன் ராசி மாறுகிறார். முக்கிய கிரகங்களின் பெயர்ச்சி நிகழ்க இருக்கிறது. இந்த மாதத்தில் ஏராளமான நன்மைகளை பெற போகும் ராசியினர் யார் யார் என்று பார்க்கலாம். மே மாதத்தில், பல்வேறு கிரகங்களின் பெயர்ச்சியால் ராசிகள் மற்றும் நட்சத்திரக் கூட்டங்களில் மாற்றங்கள் ஏற்படும். இது அனைத்து ராசிகளிலும் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும்.

மே மாத தொடக்கத்தில், குரு பகவான் ராசி மாறுகிறார். மேலும், சுக்கிரன் மற்றும் புதன் ஆகியோரும் மே மாதத்தில் ராசி மாறுகிறார்கள். இதனால், அனைத்து ராசிக்காரர்களுக்கும் சுப மற்றும் அசுப பலன்கள் ஏற்படும். திரிக் கணித பஞ்சாங்கத்தின்படி, மே 15ஆம் தேதி வியாழக்கிழமை மதியம் 12:11 மணிக்கு சூரியன் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதனால், எந்த ராசிகள் அதிர்ஷ்டசாலிகளாக இருப்பார்கள் என்பதைப் பார்ப்போம்.

### துலாம் ராசிக்கான மே மாத ராசி பலன்

துலாம் ராசிக்காரர்களுக்கு நேரம் நன்றாக இருக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு முழு ஆதரவு அளிக்கும். சமூகத்தில் மரியாதை மற்றும் கௌரவம் அதிகரிக்கலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கலாம். எந்த முடிவையும் நன்றாக யோசித்து எடுங்கள். எந்த வேலையையும் அவசரப்பட்டு செய்யாதீர்கள். உங்கள் தொழில் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். உறவுகளில் முன்னேற்றம் ஏற்படலாம். வேலைக்குச் செல்வோருக்கு நேரம் சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் நல்ல நேரத்தை செலவிடுவீர்கள்.

### ரிஷபம் ராசிக்கான மே மாத ராசி பலன்

ரிஷப ராசிக்காரர்களுக்கு நேரம் நன்றாக இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படலாம். உறவுகளில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் விருப்பம் நிறைவேறும். உங்கள் துணையிடமிருந்து ஆதரவு கிடைக்கும். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். வேலைக்குச் செல்வோருக்கு நேரம் சிறப்பாக இருக்கும். பணியிடத்தில் வெற்றி பெற முடியும். நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்படலாம். செல்வம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### சிம்மம் ராசிக்கான மே மாத ராசி பலன்

சிம்ம ராசிக்காரர்களுக்கு நேரம் நன்றாக இருக்கும். பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. நிதி நிலைமையில் மாற்றம் ஏற்படலாம். மனம் மகிழ்ச்சியாக இருக்கும். உறவினர்கள் வந்து போவார்கள். உங்கள் கடின உழைப்புக்கு பலன் கிடைக்கும். வேலையில் வெற்றி கிடைக்கும். விருப்பங்கள் நிறைவேறும். தொழில் செய்வோருக்கு நேரம் சிறப்பாக இருக்கும். பெரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம். வேலைக்குச் செல்வோருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.

### கும்ப ராசிக்கான மே மாத ராசி பலன்

கும்ப ராசிக்காரர்களின் அதிர்ஷ்டத்தை சூரியன் பிரகாசிக்கச் செய்வார். மக்களிடையே மரியாதை அதிகரிக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். சர்ச்சைகளில் இருந்து விலகி இருங்கள். காதல் உறவில் பிணைப்பு வலுப்படும். திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. இந்த நேரம் ராசிக்காரர்களுக்கு மிகவும் சிறப்பானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு பலன் கிடைக்கும். உறவில் இனிமை அதிகரிக்கும். உங்கள் குடும்பத்தினருடன் நல்ல நேரத்தை செலவிடுவீர்கள். வேலைக்குச் செல்வோருக்கு நேரம் சிறப்பாக இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். சம்பளமும் உயரலாம்.




**மேஷ ராசி அன்பர்களே,** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி இந்த மாதம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டாலும், உடனே நீங்கிவிடும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் பிரச்னைகளைத் தவிர்த்துவிடுவீர்கள். அவர்களிடமிருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. சிலருக்கு தடைபட்ட திருமணம் கூடி வரும். சகோதர வகையில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்யவும். தந்தைவழி உறவினர்களால் சிற்சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். மாத பிற்பகுதியில் எதிரிகளால் இடையூறுகள் ஏற்படக் கூடும். வியாபாரத்தில் மாத முற்பகுதியில் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். பிற்பகுதியில் வியாபாரத்தில் சற்று பிற்போக்கான நிலையே காணப்படும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் பிரச்னை எதுவும் இருக்காது. கணவரின் அன்பும் ஆதரவும் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் அனுசரித்துச் செல்வது நல்லது

**வணங்க வேண்டியதெய்வம்: விநாயகர், ஸ்லோகம்: விநாயக அஷ்டகம், பரிகாரம்: விநாயகருக்கு தேங்காய் எண்ணெயில் தீபம் ஏற்றுவது, சந்திராஷ்டமம்: சித்திரை 29-ம் தேதி 12/05/2025 திங்கள்கிழமை இரவு 2.42 மணி முதல் வைகாசி 1-ம் தேதி 15/05/2025 வியாழக்கிழமை பகல் 1.24 மணி வரை.**

---




**ரிஷப இராசி அன்பர்களே,** பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய மாதம். புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அடுத்தடுத்து பிரச்னைகள் வந்தாலும் தெய்வ அனுகிரகத்தால் சுலபமாகச் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைப்பதுடன், அவர்களில் சிலரால் சங்கடங்களும் ஏற்படக்கூடும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் – மனைவி இருவருக்கு மிடையே மனவருத்தங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனமாக இருந்து கொள்ளவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். மாதப் பிற்பகுதியில் தாய்வழி உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்கு முக்கிய பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கவும், அவர்கள் மூலம் பொருளாதாரரீதியாக நல்ல திருப்பம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறி யானாலும் முடிந்துவிடும். வாடிக்கையாளர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும் என்பதால் அவர்களுடன் கனிவான அணுகுமுறை மிகவும் அவசியம். பற்று வரவில் பிரச்னை எதுவும் இல்லை. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்னை எதுவும் இருக்காது. தேவையான பணம் கிடைக்கும். உறவினர்களிடம் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். கணவர் நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும்.

**வணங்கவேண்டியதெய்வம்: சிவபெருமான், ஸ்லோகம்: திங்கள்கிழமை தோறும் சிவ காயத்ரி, பரிகாரம்: சிவபெருமானுக்கு வில்வத்தால் அர்ச்சனை, நெய்தீபம், சந்திராஷ்டமம்: வைகாசி 1-ம் தேதி 15/05/2025 வியாழக்கிழமை பகல் 1.25 மணி முதல் வைகாசி 3-ம் தேதி 17/05/2025 சனிக்கிழமை இரவு 9.56 மணி வரை.**

---




**மிதுன இராசி அன்பர்களே,** பெரியோர் களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பொன் பொருள் சேரும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் வீண் விரோதம் வரக்கூடும். மாதப் பிற் பகுதியில் கணவன் – மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. மாத முற்பகுதியில் வீடு, நிலம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கும். அவருடைய தேவையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு அரசின் சலுகை, வங்கிக் கடன் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். அவர்களின் சாமர்த்தியத்தால் விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைக்கக்கூடும். பெண்களுக்கு கணவர் மற்றும் குடும்பத்தாரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட பிணக்குகள் சுமுக நிலை ஏற்படும். சகோதரர்களால் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமானாலும் கிடைத்துவிடும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனை, ஸ்லோகம்: சனீஸ்வர பகவான் அஷ்டோத்தரம், பரிகாரம்: சனீஸ்வர பகவானுக்கு எள்ளெண்ணெய் தீபம் ஏற்றி, வழிபட நன்மை ஏற்படும். சந்திராஷ்டமம்: வைகாசி 3-ம் தேதி 17/05/2025 சனிக்கிழமை இரவு 9.57 மணி முதல் வைகாசி 6-ம் தேதி 20/05/2025 செவ்வாய்க் கிழமை அதிகாலை 4.05 மணி வரை**

---




**கடக இராசி அன்பர்களே,** எதிலும் வெற்றியே பெறுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்ட பிரச்னை நீங்கி, ஒற்றுமை ஏற்படும். உங்கள் முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சிறிய அளவில் பாதிக்கப்பட்டாலும் உடனே நிவாரணம் கிடைக்கும். பழைய கடன்கள் விஷயத்தில் சற்று கவனமாக இருக்கவேண்டியது அவசியம். தந்தை மற்றும் தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாத முற்பகுதியில் சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். பிற்பகுதியில் அவர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால், அவர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ள வேண்டும். தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த காரியம் அதிக அலைச்சலைத் தருவதுடன் வீண் விரயத்தையும் ஏற்படுத்தும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வது சற்று மனவருத்தம் தரும். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது.

வியாபாரிகளுக்கு விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். மறைமுகத் தொல்லைகள் நீங்கும். பங்குதாரர்கள் வியாபார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருப்பார்கள். பணியாளர்களும் நல்லபடி ஒத்துழைப்பார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். அக்கம்பக்கத்தில் இருக் கும் பெண்கள் உதவிகரமாக இருப்பார்கள். கணவருடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைகளால் பெருமை அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், ஸ்லோகம்: ஆஞ்சநேயர் ஸ்லோகம் சொல்லுதல், பரிகாரம்: வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு துளசி அர்ச்சனை, சந்திராஷ்டமம் : வைகாசி 6-ம் தேதி 20/05/2025 செவ்வாய்க் கிழமை அதிகாலை 4.06 மணி முதல் வைகாசி 8-ம் தேதி 22/05/2025 வியாழக்கிழமை காலை 8.06 மணி வரை**




**சிம்ம இராசி அன்பர்களே,** எந்த ஒரு விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். சிலருக்கு பிள்ளைகளால் மகிழ்ச்சியும், பெருமையும் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மாத முற்பகுதியில் தாய்மாமன் வகையில் அனுகூலம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படக்கூடும். தேவையில்லாத சகவாசத்திலிருந்து விடுபடுவீர்கள். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். சகோதரர்கள் உதவி கேட்டுத் தொந்தரவு செய்வார்கள். மாதப் பிற்பகுதியில் சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். நீண்ட நாட்களாக நிறை வேற முடியாமல் போன தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் வழக்கம்போல் இருந்தாலும் செலவுகள் அதிகரிக்கும். பணியாளர்கள் ஏனோ தானோ என்று வேலை பார்ப்பார்கள். சற்று கண்டிப்புடன் நடந்துகொள்வது நல்லது. சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். பெண்களுக்கு, கணவனின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். அடகில் வைத்திருந்த நகைகளை மீட்க வாய்ப்பு ஏற்படும். தோழிகளின் ஆதரவு உற்சாகம் தரும்.

**வணங்க வேண்டியதெய்வம்: குருபகவான், ஸ்லோகம்: குரு காயத்ரி, பரிகாரம்: தட்சிணாமூர்த்தி வழிபாடு, ஞாயிற்றுக்கிழமைகளில் விநாயகர் வழிபாடும் நலம் சேர்க்கும், சந்திராஷ்டமம்: வைகாசி 8-ம் தேதி 22/05/2025 காலை 8.07 மணி முதல் வைகாசி 10-ம் தேதி 24/05/2025 காலை 10.51 மணி வரை**

---




**கன்னி இராசி அன்பர்களே,** ஓரளவுக்கு சாதகமான மாதம். பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் குறைவாகவே இருப்பதால் கடன் வாங்கவேண்டிய அவசியம் இருக்காது என்பது ஆறுதலான விஷயம். அந்நியர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைப்பதுடன், அவர்களில் சிலரால் சங்கடங்களும் ஏற்படக்கூடும். சிலருக்கு உஷ்ணம் தொடர்பான ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணவரவு தேவையான அளவுக்கு இருக்கும். செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். மாதப் பிற்பகுதியில் பிள்ளைகளால் ஏற்படும் தேவையற்ற பிரச்னைகள் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும். மேலும் உணவு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளியில் செல்ல நேரிடும்போது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். மாத முற்பகுதியில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களுடன் சுமுகமான சூழ்நிலை ஏற்படும். மாதப் பிற்பகுதியில் வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். சக வியாபாரிகளுடன் மோதல் போக்கு வேண்டாம். பணியாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவும். பெண்கள் குடும்பத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். உங்களால் குடும்பத்தின் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். வீட்டில் இருந்தபடி அலுவலக வேலைகளைப் பார்த்தால் பெண்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: விநாயகர், ஸ்லோகம்: குரு காயத்ரி, பரிகாரம்: பிரதோஷத்தன்று நந்திதேவருக்கு காப்பரிசி நைவேத்தியம், சந்திராஷ்டமம்: வைகாசி 10-ம் தேதி 24/05/2025 காலை 10.52 மணி முதல் வைகாசி 12-ம் தேதி 26/05/2025 பகல் 1.12 மணி வரை**

---




**துலாம் இராசி அன்பர்களே,** பொருளாதார வளம் கூடும். உடல்நலம் மேம்படும். சிலருக்கு ஏற்பட்டிருந்த அவப்பெயர் மறைந்து, செல்வாக்கு அதிகரிக்கும். பகைவர்களால் இருந்து வந்த இடை யூறுகள் மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பழுதான பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். அரசாங்கக் காரியங்களில் பொறுமை அவசியம். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து, வலிய வந்து மன்னிப்புக் கேட்பார்கள். நண்பர்கள் உங்கள் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். தந்தையுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மாத முற்பகுதியில் சகோதரர்களால் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிற்பகுதியில் அவர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். தொழிலதிபர்கள், வியாபாரிகள் மாதப் பிற்பகுதியில் சிறப்பான பலன்களைக் காணலாம். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராதபடி லாபம் அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட போட்டிகள் குறையும்.

பெண்கள் குடும்பத்தாரிடம் நன்மதிப்பை பெறுவர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனுகூலமாக இருப்பர். சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். லாபமும் கூடுதலாகக் கிடைக்கும்..

**வேண்டியதெய்வம்: ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனுக்கு வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும், ஸ்லோகம்: சூரிய காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது, பரிகாரம்: சூரியனுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபட பிரச்னைகள் குறையும், சந்திராஷ்டமம் : வைகாசி 12-ம் தேதி 26/05/2025 பகல் 1.13 மணி முதல் வைகாசி 14-ம் தேதி 28/05/2025 மாலை 4.01 மணி வரை**

---




**விருச்சிக இராசி அன்பர்களே,** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிதுர்வழிச் சொத்தில் இருந்த பிரச்னை சுமுகமாக முடியும். சிலருக்கு பழைய வாகனத்தை மாற்றிவிட்டு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். பணவரவு தேவைக்கு சற்று அதிகம் கிடைப்பதால் செலவுகள் போக சிறிது சேமிக்க முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை இழுபறியாக இருந்தாலும் சாதகமாக முடியும்.

சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். மாதப் பிற்பகுதியில் பிறருக்குக் கொடுத்து வராது என்று விட்டுவிட்ட கடன் தொகை கிடைப்பது மகிழ்ச்சி தரும். வீடு மாறும் எண்ணம் இருந்தால், அதற்கான முயற்சியை மாதப் பிற்பகுதியில் மேற்கொள்வது சாதகமாக முடியும். மாத முற்பகுதியில் தாய்மாமன் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் கூடுமானவரை அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு அலைச்சல் அதிகரித்தாலும், நல்ல வளர்ச்சியும், பணவரவும் இருக்கும். பங்குதாரர்கள் தக்க சமயத்தில் உதவுபவர். சிலநேரங்களில் முயற்சிகள் தடைகள் வரலாம். அரசாங்க வகையில் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும்.

பெண்களுக்கு குடும்பத்தோடு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். புகுந்த வீட்டினரின் அன்பும் ஆதரவும் உற்சாகமாகச் செயல்பட வைக்கும். பிள்ளைகள் அனுசரணையாக இருப்பார்கள்.

**வணங்க வேண்டியதெய்வம்: பெருமாள் கோயிலில் நெய்தீபம் வழிபாடு உங்களுக்கு நன்மையை தரும்.**

**ஸ்லோகம்: புதன் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக்கிழமை ராகுகாலத்தில் துர்க்கையை வழிபடுவது நன்மை தரும்.**

**சந்திராஷ்டமம்: வைகாசி மாதம் 14ம் தேதி 28/05/2025 புதன்கிழமை மாலை 4.02 மணி முதல் வைகாசி 16ம் தேதி 30/05/2025 வெள்ளிக்கிழமை இரவு 8.14 மணி வரை**




**தனுசு இராசி அன்பர்களே,** குடும்பத்தில் ஓரளவு மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். அடுத்தடுத்து தொடர்ந்து வந்த பிரச்னைகள் தீர்ந்து மனம் நிம்மதியடையும். காரியங்களில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகி, காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தவறான நண்பர்களைப் புரிந்து கொண்டு விலகிவிடுவீர்கள். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள் தவற்றை உணர்ந்து மீண்டும் வந்து பேசுவார்கள். சகோதர வகையில் அனுகூலப் பலன்கள் ஏற்படும். கணவன் – மனை விக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும். ஆனால், உறவினர்கள் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். மாதப் பிற்பகுதியில் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டு. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதற்கு கூடுதலாக உழைக்கவேண்டி வரும். முக்கிய முடிவுகளை எடுப்பதில் நிதானம் அவசியம். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். போட்டியாளர்களால் தொல்லைகள் ஏற்படக்கூடும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். வீட்டு வேலைகளில் கணவர் மற்றும் பிள்ளைகளின் உதவி உற்சாகம் தரும்.

**வணங்கவேண்டியதெய்வம்: துர்க்கை, ஸ்லோகம்: புதன் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது, பரிகாரம்: முருகப்பெருமானுக்கு செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்து வழிபட, மகிழ்ச்சி பெருகும்.**

**சந்திராஷ்டமம்: வைகாசி 16-ம் தேதி 30/05/2025 இரவு 8.15 மணி முதல் வைகாசி 18-ம் தேதி 01/06/2025 இரவு 2.33 மணி வரை**




***மகர ராசி அன்பர்களே,*** *இந்த மாதம் முழுவதும் சிறப்பான வளர்ச்சி கிடைக்கும். செயலில் வெற்றி, பொருளாதார வளம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிலில் விருத்தியைக் காணலாம். குடும்பத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்களுடனான உறவு சுமுகமாகக் காணப்படும். குடும்பத் தோடு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரிடையே மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். உங்களுடைய ஆலோசனை மிகுந்த முக்கியத்துவம் பெறும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடியாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதரர்களால் சில பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும். அரசாங்க அதிகாரிகள் உதவிகரமாக இருப்பார்கள். வழக்குகளில் நல்ல திருப்பம் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.*

*வியாபாரம் வழக்கம்போல் நடைபெற்றாலும் வீண் விரயங்களும் ஏற்படும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்படும் என்பதால் சற்று கவனமாக நடந்துகொள்ளவும். பணியாளர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.*

*பெண்களுக்கு குடும்பத்தில் ஆனந்தம் அதிகரிக்கும். தோழிகள் ஆதரவுடன் செயல்படுவர். அக்கம் பக்கத்தினர் உதவிகரமாக இருப்பர். கணவன் மற்றும் குடும்பத்தாரிடம் நன்மதிப்பைப் பெறலாம்.*

***வணங்க வேண்டியதெய்வம் : சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகர் வழிபாடு, ஸ்லோகம்: துர்க்கா அஷ்டகம், பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கை வழிபாடு அம்பாளுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்,***

***சந்திரஷ்டமம்: சித்திரை மாதம் 22ம் தேதி 05/05/25 திங்கள்கிழமை மாலை 6.54 மணி முதல் சித்திரை மாதம் 25ம் தேதி 08/05/25 வியாழக்கிழமை அதிகாலை 3.52 மணி வரை***

***2) வைகாசி மாதம் 18ம் தேதி 01/06/25 ஞாயிற்க்கிழமை இரவு 2.33 மணி முதல் வைகாசி மாதம் 21ம் தேதி 04/06/25 புதன்கிழமை பகல் 11.23 மணிவரை***




**கும்ப ராசி அன்பர்களே,** நின்று நிதானித்து செயல்படவேண்டிய மாதம். புதிய முயற்சிகளில் முழு ஈடுபாடு இருந்தால் மட்டுமே சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். குடும்பத்தினர் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு முழுமையாகக் கட்டுப் படுவர். பிள்ளை களின் பிடிவாதப்போக்கு மாறி, உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் செலவுகளை சமாளிப்பதில் சிரமம் எதுவும் ஏற்படாது. தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். தந்தைவழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். புதிய மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

அரசாங்க வகையில் வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். மாதப் பிற்பகுதியில் வீடு, நிலம் சம்பந்தமான விஷயங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும். தொழிலதிபர்களுக்கும் வியாபாரிகளுக்கும் அனுகூலப் பலன்கள் ஏற்பட்டாலும் சில பிரச்னை களும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முதலீடு செய்யும்போது ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்யவும். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

பங்குதாரர்களால் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள். பெண்களுக்கு கணவன் மற்றும் குடும்பத்தினரிடம் மரியாதை அதிகரிக்கும். பிள்ளைகளிடம் எதிர் பார்த்த பணம் கிடைக்கும். தாய்வீட்டில் இருந்து எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**வணங்க வேண்டியதெய்வம்: பைரவர், ஸ்லோகம்: கால பைரவர் அஷ்டோத்திரம், பரிகாரம்: தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபடுவது நல்லது,**

**சந்திரஷ்டமம் : சித்திரை மாதம் 25ம் தேதி 08/05/25 வியாழக்கிழமை அதிகாலை 3.53 மணி முதல் சித்திரை மாதம் 27ம் தேதி 10/05/25 சனிக்கிழமை பகல் 2.59 மணிவரை**




**மீன ராசி அன்பர்களே,** பொருளாதார வசதி திருப்திகரமாக உள்ளது. எதிர்பாராத பல நன்மைகள் நடைபெறும். காரியங்களில் இருந்த தடை, தாமதங்கள் நீங்குவதுடன் புதிய முயற்சிகளும் அனுகூலமாக முடியும். செல்வாக்கு அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறு வதற்கான வாய்ப்பு ஏற்படும். அரசாங்க வகையில் இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நி யோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்னையில் பொறுமை அவசியம். சிலருக்கு விடுபட்டுப் போன குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். வீடு மாறும் முயற்சியை இந்த மாதம் தவிர்த்துவிடவும்.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு பொருளாதார வளம் கூடும். லாபம் அபரிமிதமாக இருக்கும். ஆனால், போட்டியாளர்களால் இடையூறு வரலாம். கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளவும்.

பெண்களுக்கு உற்சாகம் தரும் மாதம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். பிள்ளைகளால் உறவினர்களிடையே உங்கள் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

வணங்கவேண்டியதெய்வம்: வியாழக்கிழமைகளில் நவகிரக சந்நிதியில் குருபகவானுக்கு நெய்தீபம் ஏற்றி,வழிபாடு செய்வது உங்களுக்கு நன்மையை செய்யும்.

ஸ்லோகம்: நவக்கிரஹ ஸ்லோகம் சொல்லுதல் (or) கேட்டல், பரிகாரம்: வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபடுவது நல்லது.

சந்திரஷ்டமம்: சித்திரை மாதம் 27ம் தேதி 10/05/25 சனிக்கிழமை மாலை 3.00 மணி முதல் சித்திரை மாதம் 29ம் தேதி 12/05/25 திங்கள்கிழமை இரவு 2.41 மணி வரை



கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறையின் சார்பாக

# SP திரு.ரஜத் சதுர்வேதி IPS தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறையில் பொதுமக்கள் அளித்த புகார் மனுக்கள் மீது காவல்நிலையங்களில் முறையான தீர்வு மற்றும் மனுக்களின் மீதான நடவடிக்கைகளில் திருப்தி பெறாத மனுதாரர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ரஜத் சதுர்வேதி IPS, அவர்களின் தலைமையில் ஒவ்வொரு வார புதன்கிழமையும் மக்கள் குறை தீர்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மக்கள் குறை தீர்வு கூட்டம் நடைபெற்றது, பொதுமக்கள் காவல்நிலையங்களில் அளித்த புகார் மனுக்களின் மீதான நடவடிக்கைகளில் திருப்தி பெறாத 26 மனுதாரர்களின் குறைகளை கேட்டறிந்து உரிய விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன், காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் மனுதாரர்கள் பலர் பங்கேற்றனர்.

நிருபர்: R.ராமநாதன், கள்ளக்குறிச்சி



திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம் IPS அவர்களின் அறிவுரையின்படி துவாக்குடி போக்குவரத்து காவல்துறையினர் சார்பில் துவாக்குடி சுங்கச்சாவடி பகுதியில் சாலை பாதுகாப்பு விதிகள், தலைக்கவசம் மற்றும் சீட்பெல்ட் அணிவதன் பயன்கள் பற்றியும் மற்றும் காவல்துறை உதவி எண்கள் பற்றியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தலைமை நிருபர்: N.ராக்கேஷ் சுப்ரமணியன்

# உங்களுக்கு தெரியுமா?

# 7.5%

## +2 முடித்துள்ள அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கான உயர் கல்வியில் ஒதுக்கீடு



***7.5% கோட்டா என்றால் என்ன..?***

☑ அரசுபள்ளியில் 6-12 வகுப்பு படித்த குழந்தைகளுக்கு அனைத்து தொழில் படிப்புகளிலும் வழங்கப்படும் சிறப்பு ஒதுக்கீடு 7.5% கோட்டாவில் இடம் பிடித்தால் கல்லூரி கட்டணம் & விடுதி கட்டணம் கிடையாது.

***RTE Act 2009 மூலம் தனியார் பள்ளி களில் 6, 7, 8 வகுப்பு படித்த குழந்தைகளுக்கு 7.5% கோட்டா கிடைக்குமா..?***

☑ கிடைக்கும் ஆனால் 9, 10, 11, 12 வகுப்புகளை தமிழக அரசுப்பள்ளிகளில் படித்திருக்க வேண்டும்.

***அரசுப்பள்ளியில் ஆங்கில வழியில் படித்தால் 7.5% கோட்டா உண்டா..?***

☑ உண்டு

***BA, BSC, BCom, BCA படிக்க 7.5% கோட்டா உண்டா...?***

☑ இல்லை. ஆனால் 7.5% கோட்டா குழந்தைளுக்கு புதுமைப்பெண் திட்டம் & தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதம் ரூ.1000 கிடைக்கும்.

***7.5% கோட்டா எந்தெந்த படிப்புகளுக்கு உண்டு..?***

☑ கீழ்காணும் தொழில் படிப்புகளுக்கு மட்டும் 7.5% கோட்டா உண்டு. MBBS BDS BSMS BUMS BAMS BHMS (NEET தேவை)
BE through TNEA Counselling.
B.V.Sc B.F.SC BSC (Agri) Hort. Forestry Sericulture BBA (Fishery Marketing)
B.Tech. Agri Engi / Bio Tech / Bio Informatics / Dairy Tech.

***மொத்தம் எத்தனை பேருக்கு 7.5% கோட்டா Free Seats கிடைக்கும்..?***

☑ BE படிப்பில் Phy,Che, Maths அதிக மதிப்பெண் எடுக்கும் சுமார் 11,000-பேருக்கு Free Seats கிடைக்கும், பிற எல்லா படிப்புகளையும் சேர்த்து சுமார் 1000-பேருக்கு Free Seats கிடைக்கும்.

***BA, BSC, BCom, BCA படிக்க முதல் தலைமுறை பட்டதாரி சான்று தேவையா..?***

☑ தேவையில்லை...!

***எந்த படிப்புகளுக்கு முதல் தலைமுறை பட்டதாரி சான்று வாங்க வேண்டும்...?***

☑ MBBS, BDS, BE, Agri, BVSc, BFSC, B.Tech, BA, LLB போன்ற தொழில் படிப்புகளுக்கு இச்சான்று பயன்படும். அதுவும் 7.5 கோட்டாவில் சீட் கிடைத்தால் தேவையில்லை. SC, ST, SCA குழந்தைகளுக்கு முதல் தலைமுறை பட்டதாரி சான்று தேவையில்லை. 7.5% கோட்டா இல்லாத BC , MBC , BCM , DNC குழந்தைகளுக்கு மட்டும் இச்சான்று பயன்படும்.

***முதல் தலைமுறை பட்டதாரி சான்றின் பயன் என்ன..?***

☑ உங்கள் கல்லூரி Tuition Fees ல் 50% ஐ அரசு செலுத்தும்.

***PSTM - Persons Studied Under Tamil Medium கோட்டா என்றால் என்ன?***

☑ 7.5% கோட்டா என்பது அரசு பள்ளியில் 6-12 வகுப்புகள் படித்த குழந்தைகள் உயர்கல்வி பெறுவதற்கு வழங்கப்படும் சலுகை.
PSTM கோட்டா என்பது 1-12 வகுப்புகள் அனைத்தையும் Tamil Medium வழியாகவும் தொடர்ந்து கல்லூரி பட்ட படிப்பையும் Tamil Medium வழியாகவும் படித்து முடிப்பவர்களுக்கு தமிழ்நாடு அரசின் TNPSC, TRB, USRB வேலை வாய்ப்புகளில் வழங்கப்படும் 20% சிறப்பு முன்னுரிமை வழங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் டிகிரி வரை தமிழ் வழியில் படித்தால், விரைவில் அரசு பணியில் சேரலாம்.



# கார், ஆட்டோவில் 110 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல்

## கடலூர் மாவட்ட SP திரு.S.ஜெயக்குமார் IPS தலைமையில் அதிரடி

போதை பொருட்களை கடத்தி விற்பனை செய்யும் நபர்களை கண்காணித்து கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் பிறப்பித்த உத்தரவின்பேரில் சேத்தியாதோப்பு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.விஜிகுமார் அவர்கள் மேற்பார்வையில், ஸ்ரீ முஷ்ணம் காவல் ஆய்வாளர் திரு.வீரசேகரன், காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தனிப்படை உதவி ஆய்வாளர் ராஜா மற்றும் போலீசார் ஸ்ரீ முஷ்ணத்திலிருந்து அரியலூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது, வந்த கார் மற்றும் ஆட்டோவில் 110 கிலோ குட்கா பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

போதை பொருட்களை கைப்பற்றி அதை கடத்தி வந்த ஸ்ரீ முஷ்ணத்தைச் சேர்ந்த வெங்கடேசன்(48), சுரேஷ்(30), மணிகண்டன் மற்றும் அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தைச் சேர்ந்த கிளின்டன்ராஜ்(27) ஆகியோரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

சிறப்பு நிருபர்: P.முத்துகுமரன், கடலூர்.




காஞ்சிபுரம் ஆட்சியரகத்தில் குறைதீர் கூட்டம்

# நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஆட்சியர்

## திருமதி. கலைச்செல்வி மோகன் IAS

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் IAS அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.25,000/- மற்றும் 1 பவுன் தங்க நாணயமும் வழங்கினார்கள்.

சிறப்பு நிருபர்: ம.சசி, காஞ்சிபுரம்.







**திருச்சி மாநகரில் கணாமல்போன மற்றும் தவறவிட்ட**

# 13,50,000 மதிப்பிலான செல்போன்கள் மீட்டு ஒப்படைத்த காவல் ஆணையர் N.காமினி IPS

திருச்சி கே.கே.நகர் ஆயுதப்படை சமுதாய கூடத்தில், பொதுமக்கள் சிறப்பு குறைதீர் முகாம் காவல் ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த சிறப்பு முகாமுக்கு நேரில் வந்து பொதுமக்கள் கொடுத்த 35 மனுக்களை பெற்று, சம்மந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு அனுப்பி, உரிய தீர்வு காண அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும் திருச்சி மாநகரில் பொதுமக்கள் தவறவிட்ட மற்றும் காணாமல் போன செல்போன்களை விரைந்து கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக் கைகள் மேற்கொள்ள காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

அதன்படி, பொதுமக்கள் கொடுத்த புகாரின்படி கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் காணாமல் போன செல்போன்கள் பற்றிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்ததில் மொத்தம் 95 ஆன்டிராய்டு செல்போன்கள் (மதிப்பு சுமார் ரூ.13,50,000/-) கண்டுபிடித்து கே.கே.நகர் ஆயுதப்படை சமுதாய கூடத்தில் செல்போன்களின் உரிமையாளர்களிடம் காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள் ஒப்படைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது காவல் ஆணையர்கள் (வடக்கு & தெற்கு), காவல் உதவி ஆணையர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உடனிருந்தார்கள்.

தலைமை நிருபர்: மு.பாண்டியராஜன்.



திருப்பூர் மாவட்டத்திலிருந்து கரூர் வருகை தந்த

# பைக் சாகச பயணத்தில் ஈடுபட்டுள்ள முன்னாள் ராணுவ வீரர்களிடம் கலந்துரையாடிய SP திரு.மு.பெரோஸ்கான் அப்துல்லா IPS அவர்கள்

சென்னை ரெஜிமண்டல் மையத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் மற்றும் குடும்பத்தினரின் குறைபாடுகளை களைய தமிழ்நாடு முழுவதும் மேற்படி சென்னை ரெஜிமண்டல் மையத்தில் பணிபுரியும் 8 இராணுவ வீரர்கள் அடங்கிய பைக் சாகச பயணத்தை தொடங்கினர். பயணத்தின் ஒரு பகுதியாக ஊட்டி வெலிங்டன் பகுதியைச் சேர்ந்த கேப்டன் கர்தீப் சிங் தலைமையில் திருப்பூர் மாவட்டத்திலிருந்து கரூர் வருகை தந்த, பைக் சாகச குழுவைச் சேர்ந்த 8 ராணுவ வீரர்களுக்கு கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.K.பெரோஸ்கான் அப்துல்லா IPS., அவர்களின் உத்தரவுப்படி கரூர் மாவட்ட எல்லையான வைரமடையில் காவல்துறை சார்பில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

பின்பு கரூர் நகர காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்தடைந்தது. மாவட்ட முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் குறைகள் கேட்டுத் தெரிந்து கொண்டனர். பின்பு, கரூர் மாவட்ட காவல் அலுவலகத்துக்கு வந்த பைக் சாகச குழுவினருடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மு.பெரோஸ்கான் அப்துல்லா, IPS அவர்கள் உரையாடினார்.

இந்த நிகழ்வில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ஜெயசந்திரன், மாவட்ட முன்னாள் இராணுவ வீரர்களின் நலச்சங்க மாவட்ட தலைவர் திரு.முருகேசன் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

நிருபர்: நபிமுகமது, கரூர்




செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438




## எந்த இஸ்லாமிய தேசத்திலும் கிடைக்காத பெருமை

# இஸ்லாமிய வீராங்கனைக்கு பாரதம் தந்த பெருமை

சோஃபியா குரைஷி எனும் வீரமங்கை தான் உலகம் அறிய ( இஸ்லாமிய உலகமும் பார்க்க)

பாரத ராணுவத்தின் ஆபரேஷன் சிந்தூர் செயலின் விளக்கத்தை தர வாய்ப்பைப் பெற்றார். அவருடன் வியோமிகா சிங் எனும் சீக்கிய வீரமங்கையும் ஆங்கிலத்தில் விளக்கம் தந்தார். முஸ்லிம் பெண் மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

பாரத மண் மட்டும் தான் அவர்களது சாதனை களமென இறைவன் தந்தது என்பதை உணர்வார்கள். சமூக வலைதளங்களில் இரண்டு பெண் அதிகாரிகளுக்கும் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. சோபியா குரேஷியின் வீரதீர செயலுக்கு அவரின் பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

நமது தாய்மார்களின் குங்குமத்தை அழித்தவர்களை பழிவாங்கிவிட்டோம். தனது தாத்தா, தந்தையின் பாதையை பின்பற்றவே சோபியா விரும்பினார் தாயார் ஹலிமா குரேஷி கூறினார். உங்களுக்கும் உங்கள் தேசப்பற்றுள்ள குடும்பத்துக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள் சகோதரி.



**கர்னல் சோபியா குரேஷி**

ஆபரேஷன் சிந்தூர் குறித்து விளக்கம் அளித்த 2 பெண்களில் ஒருவர் கர்னல் சோபியா குரேஷி. 44 வயதாகும் இவர், குஜராத்தை சேர்ந்தவர். ராணுவக் குடும்பத்தில் இருந்து வந்தவர். இவரின் தாத்தா, அப்பா, கணவர் என அனைவருமே ராணுவத்தில் இருந்தவர்கள்/ இருப்பவர்கள்.

**வியோமிகா சிங்**

ஆங்கிலத்தில் விளக்கங்கள் சொன்ன வியோமிகா சிங், விங் கமாண்டராக செயலாற்றுகிறார். இஞ்சினியரிங் பட்டதாரியான இவர், திறமையான ஹெலிகாப்டர் பைலட். இந்திய எல்லையின் மலை முகடுகளுக்கு மேலே 2,500 மணி நேரம் பறந்த அனுபவம் மிக்கவர்.



# பனையை காப்போம்

எவ்வளவு அட்டூழியம் அராஜகம் இருந்தாலும் வெள்ளையர்களிடம் ஒரு நேர்மை இருந்தது. ஆனால் இன்றைய நம் அரசியல்வாதிகளிடம் அந்த நேர்மை இல்லை.

வெள்ளையர்கள் ஆண்ட காலம். திருநெல்வேலிக்கு அருகே ரயில்பாதை அமைத்துக்கொண்டிருந்தனர். அதற்காக நிறைய பனைமரங்களை வெட்டவேண்டிய சூழல். அங்கு பனையை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு மிகப்பெரிய வருத்தம். ஆங்கிலேயர்களிடம் சென்று பனையை வெட்டுவதை தடுக்கும் தைரியமில்லை. அதே நேரத்தில் பனைமரங்களை இழக்க மனமும் இல்லை.

உச்சி வெயில் மண்டையை பிளக்க பசியோடு ஆங்கிலேய அதிகாரிகள் இருந்த நேரம்பார்த்து அங்கிருந்த மக்கள் மண்பானையில்கொண்டு வந்த ஒரு உணவுப்பொருளை அவர்களிடம் வழங்க ருசித்து சாப்பிட்டு வாழ்த்திச் சென்றனர்.

மறுநாள் ரயில் பாதை அமைக்கும் இடத்துக்கு வந்த வெள்ளைய அதிகாரிகள், ‘‘நேற்று சாப்பிட ஏதோ கொடுத்தீர்களே! என்ன அது? மிகவும் ருசியாக இருந்தது. நீண்ட நேரம் பசியெடுக்கவில்லை. மிகவும் இதமான உணவதை எப்படி தயாரித்தீர்கள்’’. என கேட்க, அந்த மக்கள் கைகளைகாட்டிய இடம் பனைமர உச்சி.

அவர்கள் நம்பமறுக்க, பனையில் இருந்து இளம் பனைநுங்கோடு பதநீர் கலந்து, பனைவெல்லம் சேர்த்து மண்பானையில் சிறிது நேரம் வைத்திருந்து கொடுக்க நேற்று சாப்பிட்ட அதே ருசி. ‘‘வாவ்’’ என வாயை பிளந்த அதிகாரிகள் பனைமரங்களை வெட்டாமல் மாற்றுப்பாதையில் ரயில்பாதை அமைக்க உத்தரவிட்டனர். நுங்கு சீசன் முடியும்வரை அவர்களுக்கு மக்கள் தயாரித்தளித்த பனை உணவே மதிய உணவானது. மக்களின் சாதுர்யத்தால் பெரிய அளவில் பனைமரங்கள் வெட்டுவது தவிர்க்கப்பட்டது.

வெள்ளையர்களிடமிருந்து பனைமரங்களை காத்த நம்மால் இன்று ஆளும் வர்க்கம் சாலை விரிவாக்கம் என்ற பெயரிலும், அறியா மக்கள் பனை எதற்கு என்று முடிவெடுத்து அதை அழிக்கும் முடிவிலிருந்தும் காக்கமுடியவில்லை.

பனை என்றதும் இன்றைய தலைமுறைக்கு நினைவில் வருவது நுங்கு. வியர்குருக்கு மருந்தான நுங்கை ருசியான பாயசம் வைத்தும் அசத்த முடியும். நுங்கு எடுத்து சாப்பிட்டபின் காயைக் கொண்டு தயாரித்த வண்டி உருவாக்கி விளையாடிய அனுபவம் முன் தலைமுறையோடு பறிபோனது. முற்றிய நிலையில் உள்ள பனம்பழத்தை பறித்து சீவி, அவித்து சாப்பிட்ட ருசி, விழுந்த பழத்தை சுட்டு சாப்பிட்ட ருசி, இன்னும் நாவிலிருந்து அகலவில்லை.

அன்றைய கிராமத்துவாழ்க்கையில் பனம்பழம் விழும் காலங்களில் எங்கள் முதல் வேலை பனம்பழம் பொறுக்குவது. பொறுக்கிவந்த பழங்களை ஒரு இடத்தில் குவித்துவைத்திருப்போம். சில வாரங்களில் நன்கு பழுத்து அந்த பகுதியில் செல்லும் போது வாசம் வரும் பக்குவத்தில் அதை தனித்தனி விதைகளாக பிரித்து உலரவிடுவோம்.

விதைகள் உலரும் அதே நேரத்தில் பனங்கிழங்கு விளையவைக்க இடத்தை தயார்செய்வோம். இரண்டடி ஆழத்திற்கு மண்ணை புரட்டி சாம்பல் மக்கிய உரங்கள்

கலந்து நடுமிடத்தை மட்டமாக்கி, உலர்ந்த விதையின் தலைப்பகுதி மேலிருக்குமாறு அடுக்கி மேலே சிறிது மணல் தூவிவிட்டோமென்றால் போதும் 115 லிருந்து 130 நாட்களுக்குள் பனங்கிழங்கு தயாராகிவிடும்.

அவித்து உண்பதாகட்டும், சுட்டு சாப்பிடுவதாகட்டும் அவ்வளவு ருசி. அதுவும் இரவு படுக்கச் செல்லும்போது, விறகடுப்பு நெருப்பில் புதைத்து வைத்து காலையில் எடுக்கும் பனங்கிழங்கை இலேசாக வளைத்தால் சுருக்கம் சுருக்கமாக வந்தால் அது சரியாக வெந்திருக்கிறது என்பதை உணர்த்தும்.

சுட்ட பனங்கிழங்கை துருவி அதோடு அப்போது பறித்த தேங்காயின் துருவலை சேர்த்து சாப்பிட்டா..! அடடா பாழாய்போன பணத்தை தேடி நகரத்துக்கு வந்ததால் இழந்தவைதான் எத்தனை.!

பனங்கிழங்கை சனி மாலை அறுவடைசெய்து அரையடி நீளத்துக்கு வேரைவிட்டு நறுக்கி விதைகளை நீக்கி தலைப்பு மாற்றி நூறு கிழங்குகளாக கட்டி மறுநாள் ஞாயிறு சந்தைக்கு எடுத்துச்சென்று விற்று வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கிவருவோம்.

சரியாக கிழங்கு வராத சிறு விழுதுமட்டும் வந்த விதையை குறுக்காக வெட்டினால் உள்ளிருக்கும் பனம்பூவின் ருசிக்கு பனைமரத்தையே எழுதிவெக்கலாம். பனங்கிழங்கு அறுவடை செய்தபின் கிடைக்கும் விதைக்குடுகை அற்புதமான விறகு.

பொங்கலுக்கு இருவாரங்களுக்கு முன்னே பனங்குருத்தை வெட்டி, சரியான அளவில் வகுந்து, பனியிலும் வெயிலிலும் பதப்படுத்தி முட்டுமாலை, நெத்திச்சுட்டி, அரிசிமாலை எனச்செய்து மண்பானை ஓட்டில் சாயம் காய்ச்சி, அதில் பனம் ஓலையில் செய்தபொருட்களை முக்கி, சாயமேற்றி மாட்டுப் பொங்கலன்று மாடுகளுக்கு அணிவித்து மகிழ்வோம்.

தன்னிலிருந்து கிடைக்கக்கூடிய பொருட்களால் மனித வாழ்வை தன்னிறைவாக்கும் பனை. பனையின் பயன்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.



- ☞ பனை ஓலை காத்தாடி,
- ☞ பனை ஓலை கொழுக்கட்டை,
- ☞ பனை ஓலை பாய்,
- ☞ பனை ஓலை பெட்டி,
- ☞ பனை ஓலை கூடை,
- ☞ பனை ஓலை குச்சிபெட்டி,
- ☞ அபூர்வமாய் இருந்த ஒரே மாதுளைச்செடியில் காய்களை அணில் கடிக்காமல் இருக்க அப்பா செய்து கட்டிவிடும் பனை ஓலை பெட்டி,
- ☞ அக்னி நட்சத்திரத்தன்று வெட்டி, அழகாய் அடுக்கி, பதப்படுத்திய பனை மட்டையில் வெய்த வீட்டில் கோடையில் குளிர்ச்சியையும், குளிர்காலத்தில் கதகதப்பையும் உணர்ந்த அனுபவம்.
- ☞ அப்பப்பா பனைஓலையில்தான் எத்தனை பரவசம்.
- ☞ பதநீர் குடிக்கவும், சாப்பிடவும் பயன்பட்ட பச்சை பனை ஓலை குடலை.
- ☞ கால்சியம் நிறைந்த ருசியான பதநீர், அதில் காய்ச்சி எடுத்த நலம்பயக்கும் பனைவெல்லம்.
- ☞ பதப்படுத்திய மருத்துவ குணம் கொண்ட பனங்கற்கண்டு.
- ☞ வீடுகட்ட வாரை, விறகாக மட்டை, மிதியடிசெய்ய சப்பை (ஒரு காலத்தில் கீழ் தஞ்சையில் பலகுடும்பங்கள் பனைமட்டை நார் தயாரித்து கேரளாவுக்கு அனுப்பி அந்த நார் மிதியடியாக தமிழ்நாடு திரும்பும்).
- ☞ காய்கறி பந்தல் போட நார்.
- ☞ வீடுகட்டவும், கட்டில் தயாரிக்கவும் பயன்படும் அகனி.
- ☞ முக்கியமாக உடலுக்கு நல்லதா? கெடுதலா? என விவாதத்தில் இருக்கும் கள்ளு.
- ☞ ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட்ட பனையிலிருந்து தயாரிக்கும் பனை வெல்லத்தோடு ஒப்பிடுகையில் அதே பரப்பில் பயிரிடும் கரும்பிலிருந்து கிடைக்கும் வெல்லத்தின் மதிப்பீடு குறைவு.
- ☞ ஒருமுறைவிதைத்தால் பத்து ஆண்டுகளில் இருந்து ஒரு நூற்றாண்டுவரை பயன்தரக்கூடியது பனை.
- ☞ மழைநீரை பூமிக்கடியில் சேகரித்து வெளியே விடாமல் பராமரிப்பது பனை.




# புற்றுநோயை தோற்கடித்தது அன்னாசி வெந்நீர்

ஐசிபிஎஸ் பொது மருத்துவமனை பேராசிரியர் டாக்டர் கில்பர்ட் ஏ.க்வாக், இந்த புல்லட்டின் பெறப்பட்ட ஒவ்வொருவரும் பத்து பிரதிகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சென்றால், குறைந்தபட்சம் ஒரு உயிராவது காப்பாற்றப்படும் என்று வலியுறுத்தினார்.

நான் என் பங்கில் சிலவற்றை செய்துள்ளேன், உங்களாலும் முடியும் என்று நம்புகிறேன். நன்றி!

அன்னாசி சுடுநீர் உங்கள் உயிரைக் காப்பாற்றும். சூடான அன்னாசி புற்றுநோய் செல்களை அழிக்கிறது.

ஒரு கோப்பையில் 2 முதல் 3 அன்னாசி பழத்தை மெல்லியதாக நறுக்கி, வெந்நீரில் சேர்க்கவும், அது ‘‘கார நீர்’’, தினமும் குடித்து வந்தால், அனைவருக்கும் நல்லது.

சூடான அன்னாசி புற்றுநோய் எதிர்ப்பு பொருட்களை வெளியிடுகிறது, இது பயனுள்ள புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவத்தில் சமீபத்திய முன்னேற்றம்.

அன்னாசி பழத்தின் சூடான பழம் நீர்க்கட்டிகள் மற்றும் கட்டிகளைக் கொல்லும் விளைவைக் கொண்டுள்ளது. இது அனைத்து வகையான புற்று நோய்களையும் குணப்படுத்தும் என்று நிரூபிக்கப் பட்டுள்ளது.

அன்னாசிப்பழ வெந்நீர், ஒவ்வாமை/ஒவ்வாமை காரணமாக உடலில் உள்ள அனைத்து கிருமிகளையும் நச்சுகளையும் நீக்குகிறது.

அன்னாசி பழச்சாற்றில் இருந்து பெறப்படும் மருந்து வன்முறை செல்களை மட்டுமே அழிக்கிறது மற்றும் ஆரோக்கியமான செல்களை பாதிக்காது.

மேலும், அன்னாசி பழச்சாற்றில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் அன்னாசி பாலிஃபீனால்கள் உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும், உள் இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவதைத் தடுக்கும், இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதோடு, இரத்த உறைதலைக் குறைக்கும்.

படித்து முடித்ததும், பிறர், குடும்பத்தினர், நண்பர்கள், உங்கள் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள் என்று சொல்லுங்கள்.



# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

## 3,000 நபர்களுக்கு இலவசமாக தலைக்கவசம்

சேலம் மாநகரில் சாலை விபத்துக்களை குறைக்கும் நோக்கிலும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் சேலம் மாநகர காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இருசக்கர வாகன ஓட்டிகள், அவருடன் பயணிக்கும் பயணி, இருவரும் தலைக்கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும், பாதுகாப்பாக வாகனம் ஓட்ட வேண்டும், சாலை விதிகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இதன்தொடர்ச்சியாக சேலம் மாநகரம், சுந்தர் லாட்ஜ் அருகேயுள்ள, தொங்கும் பூங்காவில் உள்ள பல்நோக்கு அரங்கில், சேலம் மாநகர காவல்துறை, Truhome Finance Lit. மற்றும் Elixir Foundation ஆகிய தொண்டு நிறுவனங்கள் இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட ஆட்சிதலைவர் Dr.இரா.பிருந்தாதேவி IAS, அவர்களும், சேலம் மாநகர காவல் ஆணையாளர் திரு.பிரவீண் குமார் அபினபு IPS அவர்களும், சேலம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் எம். இளங்கோவன் அவர்களும் மற்றும் சேலம் மாவட்ட கல்வி அலுவலர் அவர்களும் கலந்து கொண்டு மாநகராட்சி தூய்மை பணியாளர்கள், ஊர்காவல் படையினர், பத்திரிக்கை மற்றும் ஊடகதுறை அலுவலர்கள் என சுமார் 3,000 நபர்களுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கினார்கள்.

மேலும் அனைவரும் "No Helmet, No Key" உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

தலைமை நிருபர்: ஜெகதீஷ், சேலம்

# அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் வைத்திருந்தவர் தென்காசியில் கைது

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனையை முற்றிலும் தடுக்கும் பொருட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படை அமைத்தும், மாவட்டம் முழுவதும் தொடர் வாகன சோதனையில் ஈடுபட்டும், புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடைகளை உணவு பாதுகாப்பு துறை அலுவலர்களின் மூலம் கடைக்கு சீல் வைக்கப்பட்டும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

இந்நிலையில் ஆலங்குளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாயமான்குறிச்சி பகுதியில் புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைத்திருப்பதாக காவல்துறைக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆலங்குளம் காவல் ஆய்வாளர் திரு. பெர்னார்ட் சேவியர் அவர்களின் அறிவுரையின்படி காவல்உதவிஆய்வாளர் திரு. சத்திய வேந்தன் அவர்களின் தலைமையிலான காவல்துறையினர் மாயமான் குறிச்சி பகுதியில் அமைந்துள்ள மாந்தோப்பில் உள்ள குடோனில் புகையிலைப் பொருட்களை பெரிதளவு பதுக்கி வைத்து அவற்றை தேவைக்கேற்ப இருசக்கர வாகனத்தில் எடுத்துச் சென்று விற்பனை செய்து வந்த குருவன் கோட்டை அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சிவசுப்பிரமணியன் என்பவரின் மகன் கிருஷ்ணமூர்த்தி வயது 41 என்ற நபரை கையும் களவுமாக சுற்றி வளைத்து கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து 100, கிலோ எடை கொண்ட 70,000/- ரூபாய் மதிப்பிலான அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் ஒரு இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.



நிருபர்: ஆறுமுகச்சாமி, தென்காசி



# UDR பட்டா என்றால் என்ன?



UDR என்பது "Updating Registry Scheme" என்பதன் சுருக்கமாகும். இது 1984-1987 காலகட்டத்தில் தமிழக அரசு செயல்படுத்திய ஒரு திட்டமாகும்.

UDR பட்டா என்பது நில உரிமை பதிவுகளை மேம்படுத்தும் ஒரு செயல்முறை. இதன் மூலம், அப்போது நில உரிமை ஆதாரங்களின்றி இருந்த நபர்களுக்கு, நிலத்தின் உரிமைப்பட்டியல் (Revenue Records) புதுப்பிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டது.

**UDR பட்டா வழங்கப்பட்ட நிலங்கள்:** பண்டைய கால நிலங்கள் (பொது பயன்பாட்டிற்காக இருந்த நிலங்கள் சில தனியாருக்கு வழங்கப்பட்டவை).

கட்டிடமற்ற நீண்டகால பயன்பாட்டு நிலங்கள்.

வழக்கமாக விவசாயம் செய்து வந்த விவசாயிகளுக்கு நில உரிமை உறுதி செய்தல்.

**UDR பட்டாவின் முக்கிய அம்சங்கள்:**

* அரசு ஆவணங்களில் பெயர் சேர்த்தல்
* நில உரிமை சான்று உறுதி செய்தல்
* விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களுக்கு பயனளிக்கிறது
* சட்டரீதியான நில உரிமை உறுதி

**UDR பட்டா தொடர்பாக நீங்கள் கவனிக்க வேண்டியவை:**

அனைத்து UDR பட்டாக்களும் சட்டப்படி வழங்கப்பட்டதல்ல. சில UDR பட்டாக்கள் சரியாக வெளியிடப்படாத காரணத்தால் வழக்குகள் நிலுவையில் உள்ளன. பட்டா நிலையை உறுதி செய்ய தாலுகா அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளலாம்.

RTI (தகவல் அறியும் உரிமை) மூலம் பட்டா நிலைபற்றி தகவல் பெறலாம்.

பட்டா சரியாக இல்லையென்றால், அதை மாற்றலாம் அல்லது உரிமைச் சான்றுகளை ஏற்படுத்தலாம்.

தகவல்:
சிறப்பு நிருபர்- குரு.சரவணன், திண்டுக்கல்.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**





06/05/2025 தமிழ்நாடு இந்து திருக்கோயில் கூட்டமைப்பு சார்பாக நிறுவனத் தலைவர் திரு.செந்தில் ஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி, பத்ம விபூஷன் ஆன்மீக செம்மல் சூப்பர் ஸ்டார் திரு.ரஜினிகாந்த் அவர்களை தமிழ்நாடு இந்து திருக்கோயில் கூட்டமைப்பு கௌரவத் தலைவர் கலைமாமணி திரு.லதா சேதுபதி அவர்களும் திரு.மணிகண்டன் முருகதாஸ் மாநில பொதுச் செயலாளர் அவர்களும் மரியாதை நிமித்தமாக சந்தித்து திரு.ரஜினிகாந்த் அவர்களுக்கு தமிழ்நாடு இந்து திருக்கோயில் கூட்டமைப்பு சார்பாக தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் (பெரிய கோயில்) உருவ மாதிரியையும் மற்றும் தமிழ்நாடு இந்து திருக்கோயில் கூட்டமைப்பின் நினைவு பதக்கத்தையும் வழங்கி ஆசி பெற்றனர். திரு.ரஜினிகாந்த் அவர்கள் தமிழ்நாடு இந்து திருக்கோயில் கூட்டமைப்பு அமைப்பு மென்மேலும் வளர அறிவுரைகளை கூறி ஆசி வழங்கினர்.



POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO